**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 76/2025** |
| Deposition of witness | : | **PW-8** |
| Name | : | **ரவிக்குமார்** |
| Father Name | : | **சின்னதுரை** |
| Age | : | **41** |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.02.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது குன்னத்தூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.07.2025 ஆம் தேதி காலை 9 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது பூங்கொடி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று குன்னத்தூர் காவல் நிலைய குற்ற எண் 266/2025 u/sec 304(2) BNS படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்து நிலையக்கோப்பினை காவல் உதவி ஆய்வாளர் ஈஸ்வரன் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். நான் பதிவுசெய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. புகார்தாரர் புகாரை எழுதிக் கொண்டு வந்தார். புகார் பெற்று சுமார் 20 நிமிடத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. புகார்தாரர் காலை 9 மணி அளவில் காவல் நிலையம் வந்தார். புகார் கொடுக்கும் போது அவர் நகைக்கான ரசீது எதுவும் கொடுக்கவில்லை நானும்

கேட்கவில்லை. அவருடன் சுமார் மூன்று பேர் வந்திருப்பார்கள். நான் அவர்களை விசாரிக்கவில்லை. அவர்களது பெயர்களும் ஞாபகம் இல்லை. புகாரில் புகார்தாரர் களவுபோன நகை எத்தனை ஆண்டுகளாக அவரது அனுபவத்தில் இருக்கிறது என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. புகாரியில் எதிரிகளின் வயது குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சுமார் 20 நிமிடத்தில் நான் முதல் தகவலறிக்கையை எனது மேல் அதிகாரி பார்வைக்கு வைத்தேன். முதல் தகவலறிக்கை பதிவு செய்து 24 மணி நேரத்திற்குள்ளாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் காலம் எட்டில் கால தாமதம் இல்லை என்று என்னால் பதிவு செய்யப்படவில்லை என்றால் நான் அவ்வாறு குறிப்பிடவில்லை, காலதாமதம் இருந்தால் மட்டும் குறிப்பிடுவது வழக்கம். சம்பவத்தின் போது எதிரிகள் எந்தவிதமான முகமூடி அணிந்திருந்தார்கள் என்று புகார்தாரர் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்து 20 நிமிடத்தில் புகார்தாரர் காவல் நிலையத்திலிருந்து கிளம்பிவிட்டார். இந்தப் வழக்கு புள்ளி விபர கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழக்கு என்றாலும் இதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.02.17 19:31:41 +0530